**செய்தி வெளியீடு எண்:706** **நாள்: 23.10.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (23.10.2017) விருதுநகரில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி
அம்மா தெய்வத்தை வணங்கி,
டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு
உங்களையெல்லாம் சந்திப்பதில்
பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

இந்த இனிய விழாவில் தலைமையுரை ஆற்றிய
மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர்
திரு. **தனபால்** அவர்களே!

சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு.**ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே!

முன்னிலையுரை ஆற்றிய பால்வளம் மற்றும் பால்பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்
திரு **கே.டி. ராஜேந்திர பாலாஜி** அவர்களே!

வரவேற்புரையாற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர்
**திரு ஆர். வெங்கடேசன்** அவர்களே!
நாடாளுமன்ற உறுப்பினர்
**திரு. டி. ராதாகிருஷ்ணன் அவ**ர்களே!
**திரு. ஆ. அன்வர் ராஜா** அவர்களே!
**திருமதி மு. வசந்தி** அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்
**திருமதி மு. சந்திரபிரபா** அவர்களே!
**மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,**
நன்றியுரை ஆற்ற உள்ள
விருது நகர் மாவட்ட ஆட்சித்தலைவர்
**திரு. அ. சிவஞானம் அவர்களே!**
வருகை தந்துள்ள

**நாடாளுமன்ற உறுப்பினர்களே,**
**சட்டமன்ற உறுப்பினர்களே,**
**தலைமைக் கழக நிர்வாகிகளே,**

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!
முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே!
கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே!
முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற
கழகக் கண்மணிகளே!
அரசு அலுவலர்களே!
பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!
வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!
இளைஞர்களே! நலத்திட்டப் பயனாளிகளே!
உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

**உழைப்பாளிகள் நகரம் என்றும், குட்டி ஜப்பான்**
என்றும் அழைக்கப்படும் **சிவகாசி நகரில்**
நடைபெறும் மாண்புமிகு புரட்சித்தலைவர்
பொன்மனச்செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களது
நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வதில்
நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஏனெனில் படத்தில் மட்டுமின்றி, நிஜ வாழ்க்கையிலும்
தொழிலாளர்களின் முன்னேற்றத்தையே பெரிதும்
போற்றியவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்.

அப்படிப்பட்ட உழைப்பாளிகள் நிறைந்த ஊரான
சிவகாசி என்றாலே நம் நினைவிற்கு வருவது
பட்டாசுகள். வருடம் முழுவதும் அயராது பாடுபட்டு, தீபாவளி அன்று நாட்டு மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் தீபாவளி பண்டிகையை கொண்டாட
தங்களது முழு உழைப்பையும் நல்கும்
தொழிலாளர் நண்பர்களை நான் பாராட்டுகிறேன்.

தங்களது உடல் நலம் பாதிக்கப்படும்,

எதிர்பாராத விதமாக ஏதேனும் விபத்து
ஏற்பட்டால், தங்களது இன்னுயிரையே
இழக்க நேரிடும் என்பதை உணர்ந்திருந்தாலும்,
வருடம் முழுவதும் உழைத்து, பட்டாசுகள் தயாரித்து,
அப்பட்டாசுகளை நாடு முழுவதும் உள்ள
சிறுவர் சிறுமியர்கள் வெடித்து மகிழும்போது
மகிழ்பவர்கள்தான் சிவகாசி தொழிலாளர்கள்.

அதுபோலவே, சிவகாசி என்றால்
நம் நினைவிற்கு வருவது பட்டாசு மட்டுமல்ல,
காலண்டர், டைரியும் ஆகும்.

இந்தியாவிலேயே அச்சுத் தொழிலில்
பல புதுமைகளைப் புகுத்தி, வண்ண வண்ண
காலண்டர்கள், அனைத்து விலைகளிலும் டைரிகள்,
தேர்தல் காலத்தில் தேவைப்படும் வண்ண வண்ண
போஸ்டர்கள், வியாபார போஸ்டர்கள் என
நம் அனைவருக்கும் தேவைப்படும்
நாட்காட்டிகள், மாத காலண்டர்கள், டைரிகள்
போன்றவற்றை மிக நேர்த்தியாக அச்சிட்டு
வழங்கும் நகரம் நமது சிவகாசி ஆகும்.

ஆப்செட் எனப்படும் புதுவகையான
தொழில்நுட்பத்தை - அச்சுத்தொழிலில் புகுத்தி
பல சாதனைகளை படைத்தவர்கள் நமது
சிவகாசி தொழிலாளர்கள்.

இந்நேரத்தில், இம்மாவட்டத்தில் உள்ள,
குறிப்பாக சிவகாசியில் உள்ள பட்டாசு தயாரிக்கும்
தொழிலாளர் தோழர்களுக்கும்,
அச்சுத் தொழிலில் ஈடுபட்டுள்ள
தொழிலாளர் தோழர்களுக்கும்,
இந்நேரத்தில் எனது வணக்கத்தையும்,
நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**‘தொழிலாளர் நகரம்’ சிவகாசி என்றால்,**
**‘வியாபார நகரம்’ - விருதுநகர்** ஆகும்.

வெளியூர் வணிகர்கள் தங்குமிடமாகவும்,
வியாபார பேட்டையாகவும் இருந்த
விருதுபட்டி என்ற ஒரு சிறிய கிராமம்தான்
18ஆம் நூற்றாண்டில் விருதுநகர் என்ற
ஒரு நகரமாக உருவெடுத்தது என்பார்கள்.
கடந்த 2015ஆம் ஆண்டு
**விருதுநகர் நகராட்சி தனது நூற்றாண்டை**
கொண்டாடி பெருமையடைந்திருக்கிறது.

இந்தியா மற்றும் மேலை நாடுகளுக்கு
விவசாயப் பொருட்களை ஏற்றுமதி
செய்யும் சந்தையாகவும்,
வியாபாரத் தலைநகரமாகவும்
விருதுநகர் இருந்த போது,
பஞ்சு, பாக்கு, புகையிலை, காபி,
தேயிலை, ஏலக்காய், சிக்கரி,
மிளகாய், மல்லி, எண்ணெய் வித்துகள்,
தானிய வகைகள் என அனைத்து வகை
வியாபாரத் தொழில்களும் சிறப்பாக நடைபெற்றது.

நூற்றாண்டுகள் கடந்தும்,
இப்போதும் இப்பெருமை தொடர்கிறது.
விருதுநகர் வியாபாரிகள் நேர்மையானவர்கள்
என்று புகழப்படுபவர்கள்.
**“மக்களைப் பெற்ற மகராசி”** என்ற படத்தில்
**வரும் மணப்பாறை மாடு கட்டி,**
**மாயவரம் ஏறுபூட்டி என்ற பாட்டில் வரும்**

**“பொதிய ஏத்தி வண்டியிலே**
**பொள்ளாச்சி சந்தையிலே**
**விருதுநகர் வியாபாரிக்கு செல்லக்கண்ணு,**
**நீ வித்து போட்டு பணத்தை எண்ணு செல்லக்கண்ணு”**

என்ற கவிஞர் மருதுகாசியின் பாடல்
விருதுநகர் வியாபாரிகள் நேர்மையானவர்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது.

விருதுநகர் மாவட்டத்தில் விவசாயம், பட்டாசு,

தீப்பெட்டி, அச்சு, ஸ்பின்னிங் மற்றும் விசைத்தறி
தொழில்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

பொதுவாக விருதுநகர் மாவட்டம்
புராதன பெருமையும், ஆன்மிக புனிதமும்,
அரசியல் வரலாறும் கொண்ட மாவட்டமாகும்.

மூன்று தமிழ்ச்சங்கங்களிலும் இடம் பெற்ற
புலவர்களான **முடக்கோரனார்,**
**பொற்கொல்லன் வெண்ணகனார்,**
**ஆதிரேயன்** ஆகியோர்
விருதுநகரில் உள்ள திருத்தங்கலில்
அவதரித்ததாக கூறப்படுகின்றது.

**பகவான் ஸ்ரீரமண மகரிஷி** அவதரித்த
**திருச்சுழி – விருதுநகரில்** தான் உள்ளது.

விருதுநகர் மாவட்டம் **பெருந்தலைவர் காமராஜரை**
இந்த உலகுக்கு தந்தது.
பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்
பல பிரதமர்களை இந்தியாவுக்கு தந்து
‘**கிங்மேக்கர்**’ என்று புகழப்பெற்றார்.

‘**தமிழ்நாடு**’ என பெயர் சூட்ட வேண்டும் என்று
கோரி உண்ணாவிரதம் இருந்து உயிர்விட்ட
**தியாகி சங்கரலிங்கனார்** அவர்கள் இந்த
**விருதுநகர் மாவட்டத்தின் மைந்தராவார்.**

**ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில்,**
**திருச்சுழி திருமேனிநாதர் திருக்கோயில்,**
**சாத்தூர் இருக்கன்குடி மாரியம்மன் கோயில், இராஜபாளையம் அய்யனார் ஆலயம்,**
**திருத்தங்கல் நின்ற நாராயண பெருமாள் கோயில்**
போன்ற புகழ்பெற்ற திருக்கோயில்களும்,
மதநல்லிணக்கத்தை வலியுறுத்தும்
**சவேரியார் தேவாலயம்** போன்ற
ஆன்மீக திருத்தலங்களும் **விருதுநகருக்கு புனிதத்தன்மையை** தருகின்றன.

**பிளவக்கல் அணை, சதுரகிரி சஞ்சீவிமலை, செண்பகத்தோப்பு காட்டு அணில் சரணாலயம், தேவதானம் அணைக்கட்டு,**
**அய்யனார் அருவி** போன்ற
**சுற்றுலாத் தலங்களையும்** கொண்டது விருதுநகர்.

நாட்டில் எந்த நீர்த்தேக்கம் வற்றினாலும் –
வற்றாமல், எப்போதும் நீர் நிறைந்திருக்கும், விருதுநகரில் அமைந்திருக்கும்
**தெப்பக்குளம்**
மேலும் விருதுநகருக்கு புகழை சேர்க்கிறது.

**'ஊர்கூடி தேர் இழுக்க வேண்டும்'** என்பார்கள்..
இந்த **விருதுநகரில் வீட்டுக்கு ஒருவர்**
என்ற கணக்கில் **ஊர்கூடி இந்த**
**தெப்பக்குளத்தை** வெட்டியிருக்கிறார்கள்.

இவ்வளவு பெருமைப்பெற்ற இந்த
விருதுநகர் மண்ணில் பொன்மனச் செம்மல்,
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின்
நூற்றாண்டு விழாவை கொண்டாடுவதிலும்,
இந்த விழாவில்  கலந்துக்கொள்வதிலும்
நான் எல்லையற்ற மகிழ்ச்சியும்
பெருமையும் கொள்கிறேன்.

அரசியல் வரலாறும், தியாக வரலாறும் கொண்ட
இந்த மண்ணில் சில கருத்துக்களை
உங்களோடு பகிர்ந்து கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று
கருதுகிறேன்.

சமீபத்தில் தொலைக்காட்சிகளிலும், செய்தித்தாள்களிலும் பலருடைய குரலும் முகமும் அடிக்கடி தெரிய ஆரம்பித்திருக்கின்றன.
ஆளும் கட்சியை பொத்தாம் பொதுவாக குறைகூறி
பேட்டி கொடுத்து –   தன்னை
மக்கள் செல்வாக்குள்ள ஒருவராக காட்டிக் கொள்ள
பலர் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் குறை கூறுகிற அளவிற்கு
நாங்கள் ஒரு காலமும் நடந்து கொள்வதில்லை.  மக்களுக்கு நாளைக்கு என்ன தேவையோ

அதை நேற்றே முடித்து வைப்பவர்கள் நாங்கள்.
உங்களுக்கு பேட்டி கொடுக்க மட்டும்தான் தெரியும்.
மக்கள் மன்றத்திற்கு வந்து செயலாற்ற முடியாது என்பது மக்களுக்கு தெரியும்.
உங்கள் பேட்டிகளை மக்கள்
பொழுது போக்காக கருதிதான் பார்க்கிறார்கள்.
நீங்கள் கடந்து வந்த பாதையை நினைத்து
எள்ளி நகையாடுகிறார்கள்.

**“ஆட்சியை கலைத்துவிடுவோம்!**
**நாளை வீட்டுக்கு அனுப்பிவிடுவோம்**
**முடிந்தது அதிமுக ஆட்சி”** என்று
மைக் கிடைத்தால் புலம்பிக் கொண்டிருப்பவர்கள் அதிமுகவின் வரலாறு
தெரியாதவர்கள்.

நீங்கள் கலைப்பதற்கும், வீட்டுக்கு அனுப்புவதற்கும்
எங்கள் இயக்கம் ஒன்றும்
நேற்று பெய்த மழையில்
இன்று முளைத்த காளான் அல்ல,
புயலாலும் அசைக்கமுடியாத ஆலமரம்.
தாங்கிபிடிக்க விழுதுகளாக ஒன்றரைக்கோடி தொண்டர்கள் இருக்கிறார்கள்.

பெரிய ஆபத்துக்களையும்,
அச்சுறுத்தல்களையும் சந்தித்து சந்தித்து
வைரம் பாய்ந்த மரமாக இது நிற்கின்றது
என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

எண்ணற்ற தொண்டர்களின்
இரத்தமும், உயிரும் இந்த மரம் வளர
உரமாக போடப்பட்டிருக்கிறது.

1977 ஆம் ஆண்டு அதிமுக ஆட்சியை
அமைக்கும் வரை, கழகத்தினர் தங்கள் உயிரை கையில் பிடித்துக்
கொண்டுதான் வாழ வேண்டியதாயிற்று.

பலபேர் தங்கள் இன்னுயிரை தந்தும்,
பல பேர் தங்கள் கண்களை, கரங்களை,
கால்களை இழந்தும், இந்த இயக்கத்தை வளர்த்திருக்கிறார்கள்.

அத்தனை எதிர்ப்புகளையும் இழப்புகளையும் தாங்கி,
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின்
பின்னால் இரும்பு மனிதர்களாக அணிவகுத்து
நின்று கழகத்தைக் காத்தவர்கள் அந்த இளைஞர்கள்.

**"நீங்க நல்லா இருக்கோணும்**
**நாடு முன்னேற –**
**இந்த நாட்டில் உள்ள**
**ஏழைகளின் வாழ்வு முன்னேற!**

**என்றும் நல்லவங்க எல்லோரும்**
**உங்க பின்னாலே – நீங்க**
**நெனைச்சதெல்லாம் நடக்கும்**
**உங்க கண்ணு முன்னால**" என்ற

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் எண்ணங்களை வெற்றியடையச் செய்தவர்கள்
நம் இளைஞர்கள் / கழக தொண்டர்கள்.
அந்த வீரம் மிக்க இளைஞர்கள் மறையவில்லை; வாழையடி வாழையாக இன்றைக்கும்
மறு அவதாரம் எடுத்து,
கழகத்தில் மக்கள் பணி ஆற்றி வருகிறார்கள்.
நான் உட்பட, இங்கே அமர்ந்திருக்கின்ற
அமைச்சர் பெருமக்கள் அனைவரும்
அப்படி வந்தவர்கள்தான்.

**திடீரென்று வந்துவிடவில்லை.**

"உழைக்கும் தோழர்களே ஒன்று கூடுங்கள்!
உலகம் நமது என்று சிந்து பாடுங்கள்!
மேடு பள்ளம் இல்லாத சமுதாயம் காண
என்ன வழி என்று எண்ணிப் பாருங்கள்!

அண்ணா சொன்னவழி கண்டு
நன்மை தேடுங்கள்!",
என்ற புரட்சித் தலைவர் அவர்களின்
பாடலையே கட்டளையாக ஏற்று
கட்சியை வளர்த்தவர்கள்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் திரைப்படத்தைப்போல் அவருடைய கட்சியும் 100 நாட்கள்தான் ஓடும் என்று கிண்டலும் கேலியும் பேசியவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்?.

அப்படி சொன்னவர்களில், தன்னுடைய
முகத்தையும், முகவரியையும் இழந்து விட்டவர்கள் ஏராளமானவர்கள்.
எங்களை
விமர்ச்சிப்பவர்களுக்கும் அதே கதிதான் ஏற்படும்.

தனக்கு பிறகும் இந்த இயக்கம்
நூற்றாண்டுகள் வாழும் என்ற
மாண்புமிகு அம்மா அவர்களின் கணக்கு – **தப்பாது.**
**உங்கள் கணக்கு வெல்லாது, செல்லாது.**

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்
உடலளவில் மறைந்த 1987 ஆம் ஆண்டு
டிசம்பர் 25ம் நாள் வரை
எதிர்கட்சிகளால் ஆட்சி பொறுப்பை நினைத்துக்கூட
பார்க்க முடியாத அளவிற்கு
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்
மக்கள் செல்வாக்கை பெற்றிருந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவருக்குப் பிறகு அஇஅதிமுக கட்சி முடிந்துவிட்டது
என்று
மீண்டும் கொக்கரித்தார்கள்.

அந்த எண்ணமும் தவிடுபொடியாகியது.
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கழகத்திற்கு தலைமையேற்று,
கழகத்தை இன்னும்
வீறுகொண்டு வளரச் செய்தார்கள்.

ஏழை எளிய மக்களை உயர்த்தும் அரசாக, பயங்கரவாதம்
– பிரிவினைவாதம் – தலைதூக்காவண்ணம், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டி,
வறட்சி, புயல், பெருமழை போன்ற இயற்கை இடர்பாடுகளிலிருந்து
தமிழ் நாட்டை விரைந்து காப்பாற்றி, பொற்கால ஆட்சியைக் கொடுத்தவர்
மாண்புமிகு
புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்களுக்கு பிறகு இந்த இயக்கம்
அவ்வளவுதான் என்று நினைத்தவர்கள்,
இன்று வாயடைத்துப் போய் நிற்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வளர்க்கப்பட்ட நாங்கள் – எத்தனை
தியாகங்களை செய்தேனும்
இந்த கழகத்தை காப்பாற்றுவோம்.

‘**ஆட்சியைக் கலைப்போம், வீட்டுக்கு அனுப்புவோம்**’ என்ற உங்கள் கனவு
ஒரு காலும் பலிக்காது.
அது கனவாக தொடரும்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, – ஊட்டியில்,
அரசு விருந்தினர் விடுதியில் தங்கியிருந்தார்கள்.
அதைக் காரணம் காட்டி,
அங்குள்ள அரசுக்குச் சொந்தமான பூங்காவில்
ஒரு படத்தின் படப்பிடிப்பை நடத்துவதற்கு,
அங்குள்ள அதிகாரிகள் அனுமதி தர மறுத்தனர்.

இதனை கேள்விபட்ட மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர் அவர்கள் உடனடியாக
சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு
அந்தப் படப்பிடிப்பை அரசு பூங்காவில்
நடத்த ஆணையிட்டார்கள். மேலும்
படப்பிடிப்பை காணவும் நேரில் வந்து விட்டார்கள்.

படப்பிடிப்பின் போது தொழில் நுட்பக் கலைஞர்கள் இரண்டு பேர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை பார்ப்பதை தவிர்த்துக் கொண்டே இருந்தனர்.

இதை கவனித்து அவர்களைப் பற்றி விசாரித்து, இருவரும் திமுகவைச் சேர்ந்தவர்கள் என்பதையும், அவர்களது பெயர்களையும் மாண்புமிகு
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்
கேட்டு அறிந்து கொண்டார்கள்.

பின்னர் படப்பிடிப்புக் குழுவினர் அனைவருக்கும் மாண்புமிகு
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தனது சொந்த செலவிலேயே
மதிய விருந்து அளித்தார்கள்.
சுற்றி வந்து எல்லோரையும் உபசரித்தார்கள்.
அந்த தொழில் நுட்பக் கலைஞர்கள்
இரண்டு பேரும் ஒரு மூலையில் அமர்ந்து
சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். மாண்புமிகு
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்
அளிக்கும் விருந்தை சாப்பிடுவதில்
அவர்களுக்குத் தயக்கம். அதேநேரம்
விருந்தை புறக்கணிக்கவும் முடியாத நிலைமை.
இந்த தர்மச்சங்கடத்தாலும், குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டுக்
கொண்டிருந்த அந்த
தொழில் நுட்பக் கலைஞர்களின் அருகில்
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் சென்றபோது அவர்களது
தலைகள்
இன்னும் குனிந்தன. மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்
சத்தமாக அந்த இருவரின் பெயர்களைச் சொல்லி அழைத்தார்.

அதிர்ச்சியுடன் இருவரும் நிமிர்ந்து
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்
அவர்களைப் பார்த்தனர்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் சிரித்துக் கொண்டே
அவர்களது தோளைத் தட்டி **''நல்லா சாப்பிடுங்க''** என்று
சொன்னதோடு மட்டுமில்லாமல்
**'இதை சாப்பிடுங்கள், நல்லா இருக்கும்'**
என்று சொல்லி சில பதார்த்தங்களை
அவர்களது இலையில் வைத்து உபசரித்தார்கள்.

ஒரு முதலமைச்சர் தங்கள் மீது
இவ்வளவு அன்பு காட்டி உபசரித்ததில்,
இருவரின் கண்களும் கலங்கி விட்டன.
அதற்கு மறுநாள் அந்தத் தொழில்நுட்பக் கலைஞர்கள் இருவரும் அதிமுகவில்
இணைந்தனர்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் இப்படிப்பட்ட அணுகுமுறைதான் தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் அவருக்கென்று ஒரு தனி முத்திரையை பதித்தது.

தன்னை மக்களிடம் நெருக்கமாக்கிய திரையுலகுக்கும், கலைஞர்களுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்
எவ்வளவோ உதவிகள் செய்துள்ளார்கள்.

திரையரங்கு உரிமையாளர்களுக்கு
சுமையாக இருந்த விற்பனை வரி
செலுத்தும் முறையை நீக்கி, ஒரு காட்சி நடந்தால்,
இவ்வளவு வரி கட்ட வேண்டும் என்ற அடிப்படையில்
**"காம்பவுண்டிங் டாக்ஸ்"** முறையை
மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள்.

குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை
மாண்புமிகு புரட்சித் தலைவரின்பால்
அதிக பற்றும் பாசமும் வைத்திருந்தார்கள்.
குறிப்பாக பெண்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை தங்கள் வீட்டுப் பிள்ளையாக கருதினார்கள் அதற்கு சான்றாக ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

மாண்மிகு புரட்சித் தலைவர் அவர்கள் நடித்த **மாட்டுக்கார வேலன்** படத்தின் ஒரு பாடல் காட்சி **வைகை அணையில்** படமாக்கப்பட்டது.
ஆயிரக்கணக்கானோர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை பார்க்கத் திரண்டனர்.

பயங்கர கூட்டம் – எந்தப் பக்கம்
திரும்பினாலும் மக்கள் தலைகள்.
பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களைப்
பார்க்க வேண்டும் என்ற ஆவலில்
போடப்பட்டிருந்த பாதுகாப்பு வளையத்தையும்
தாண்டி ஒரு மூதாட்டி, மாண்புமிகு
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்
இருக்கும் இடத்துக்கே சென்று விட்டார்.

காவலர்கள் கோபமுற்றபோதும், மூதாட்டியிடம் பரிவோடு பேசிய பொன்னமனச் செம்மல் அந்த மூதாட்டியின் குடும்பம் குறித்து விசாரித்தார்கள்.

**"உங்களுக்கு பிள்ளைகள் இருக்கிறார்களா?"** என்றார். அதற்கு
**'இருக்காங்க அய்யா'**
என்று பதிலளித்த மூதாட்டியிடம்
**'என்ன பண்றாங்க ?'** என்று அடுத்த கேள்வியை மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்
அவர்கள் கேட்டார்கள்.

அதற்கு **"ஒரு புள்ள பட்டாளத்துல இருக்கு, இன்னொரு புள்ள சினிமாவுல இருக்கு"** என்று
மூதாட்டி சொன்னார்.

மூதாட்டியின் இந்த பதிலால் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு வியப்பு. சினிமாவில் இருக்கிறார் என்றால் நிச்சயம் தனக்குத் தெரிந்திருக்குமே என்று எண்ணியபடியே

**"சினிமாவில் இருக்கும் உங்கள் பிள்ளையின்
பெயர் என்ன ?"** என்று அந்த மூதாட்டியிடம் கேட்டார்கள்.

**"நான் பெறாத அந்தப் புள்ள நீதாம்பா"** என்று கண்களில் ஆனந்தக் கண்ணீர் வடிய சொன்ன தாயை அணைத்துக் கொண்ட மக்கள் திலகத்தின் கண்களிலும் கண்ணீர் தாரை தாரையாக ஓடியது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் எண்ணமெல்லாம் மக்களை சுற்றியே இருந்தது.
எனவே, அவர் எண்ணங்கள் எவையோ
அவற்றையே கதையாகவும், வசனமாகவும், பாடல்களாகவும் அமைத்தார்கள்.

"**இல்லாமை நீக்க வேண்டும்
தொழில் ஆக்க வேண்டும் – இங்கு
எல்லோரும் வாழ வேண்டும்**"– என்ற
தனது விருப்பத்தை திரையின் மூலம்
ஒரு செய்தியாக, அறிவிப்பாக
தன் தொண்டர்களுக்கு கூறி – அவர்களை
மக்கள் பணி ஆற்ற செய்தவர் மாண்புமிகு

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

கதையின்படி திரையில் வள்ளலாக நடித்துவிட்டு, பொது வாழ்விலும் அவர் வள்ளலாகத்தான் வாழ்ந்தார்.

திரையில் வீரனாக நடித்தார்.
சொந்த வாழ்விலும் அவர் வீரனாகத்தான் இருந்தார்.

அதனால்தான், மக்கள் அவரை ஒரு
நடிகராகப் பார்ப்பதைவிட
ஒரு மாபெரும் தலைவராகப் பார்த்தார்கள்.

அந்த அளவிற்கு அவருடைய பொது வாழ்க்கை திரைவாழ்க்கையை வென்றது.

“**சத்தியம் தான் – நான் படித்த புத்தகமம்மா –**
**சமுத்துவம்தான் நான் அறிந்த – தத்துவமம்மா**”
என்று தத்துவத்தைக் கூறி– தன்னுடைய
பொது வாழ்க்கை எப்படி அமையவேண்டும்
என்பதை திரைவழியாக மக்களுக்கு முதன்முதலாக கூறிய முதல் நடிகர்
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்தான்.

பொழுதுபோக்காக இருந்த திரைப்படங்களை,
முதன் முதலில் மக்கள் விழிப்புணர்வு சாதனமாக்கிய
பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர் அவர்களையே சாரும்.
தான் நடிகராக இருந்தபோது புதியவர்களிடம்
தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும்போது
**‘நான் நடிகர் இராமச்சந்திரன்’** என்றுதான் அறிமுகப்படுத்திக் கொள்வார்கள்.
அந்த அளவிற்கு தன் தொழிலை மதித்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி ஆர் அவர்கள்.

தான் தலைவரான பிறகு,
தன்னை ஒரு மக்கள் சேவகன்,
மக்களின் பிரதிநிதி, மக்களின் காவல்காரன் என்று நினைத்துத்தான்
செயல்பட்டார்கள் .

பதவியை கிரீடமாக அவர் ஒரு நாளும்

சூட்டிக் கொள்ளவில்லை;
பதவியை ஒரு மக்கள் கட்டளையாக ஏற்று, – உழைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர் அவர்கள்.

இந்த தமிழ் மண்ணில் அவர் நட்ட அஇஅதிமுக என்கிற விதையானது –
நூற்றுக்கணக்கான ஆண்டுகளானாலும் நிலைத்து நிற்கும்.
எந்த புயலாலும், எந்த வெள்ளத்தாலும்,
எந்த சக்தியாலும், இந்த அஇஅதிமுகவை
வீழ்த்த முடியாது.

காரணம் மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர் அவர்களின் ஆன்மாவும்,
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்ஆன்மாவும்
அஇஅதிமுகவை வழி நடத்திச் செல்லும்.

நாங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்களின் வழியிலும்,
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்களின் ஆசியாலும் வந்தவர்கள்.
பேசுவதைக் குறைத்துக் கொண்டு,
திட்டங்களை செயல்படுத்துவதில்
முனைப்பாக இருக்கிறோம் என்பதை
நிரூபிக்கத்தான் இன்று விருதுநகர் மாவட்டத்திற்கு
பல கோடி திட்டங்களை கொண்டு வந்திருக்கின்றோம்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்
அவர்களின் நூற்றாண்டு விழா தேவையா ?
என்று விதண்டாவாதம் பேசுபவர்களுக்கு
இன்று அடிக்கல் நாட்டப்பட்ட திட்டங்களும்,
தொடங்கி வைக்கப்பட்ட திட்டங்களும்,
நான் அறிவிக்க இருக்கிற திட்டங்களும் தான்
பதிலாக இருக்கும்.

**விருதுநகர் மாவட்டத்தில் கடந்த
ஆறு ஆண்டுகளில் அம்மாவின் அரசு
செய்த சாதனைகளில் ஒரு சிலவற்றை
நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.**

இதை எதற்காகச் சொல்கின்றேன் என்று சொன்னால், வேண்டுமென்றே திட்டமிட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்கள், குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் அவர்கள் மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியிலே என்னென்ன திட்டங்கள் போடப்பட்டது, மக்களுக்கு என்ன நன்மை கிடைத்திருக்கின்றது என்று எப்பொழுது பார்த்தாலும் கேள்வி கேட்கின்றார். அதற்கு பதில் சொல்கின்ற விதமாக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே விருதுநகர் மாவட்டத்தில் கொண்டு வந்த திட்டங்கள், இந்த மாவட்ட மக்கள் பெற்றிட்ட நன்மைகளை இந்த நேரத்திலே புள்ளி விவரத்தோடு அவருக்கு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

விருதுநகர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு
வறட்சி நிவாரணமாக
55 கோடியே 12 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
இதன் மூலம் 68 ஆயிரத்து 981 விவசாய
பெருமக்கள் பயன் பெற்றுள்ளனர்.

கூட்டுறவு சங்கங்கள் மூலம் 10 ஆயிரத்து 468 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை
43 கோடியே 4 லட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.
விவசாயிகளுக்கு **விலையில்லா**
**வண்டல் மண் வழங்கும் திட்டத்தின் கீழ்**

390 கண்மாய்கள் மூலம் 8 லட்சத்து
6 ஆயிரத்து 928 கன மீட்டர் வண்டல் மண்
வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 10ஆயிரத்து
626 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

**குடிமராமத்து திட்டத்தின்** கீழ் விருதுநகர் மாவட்டத்தில் 22 கண்மாய்களில் வரத்துக் கால்வாய்
மற்றும் கரைகள் 2 கோடியே 81 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
புனரமைக்கப்பட்டது.
இதன் மூலம் 3ஆயிரத்து 790 ஹெக்டேர்
பாசன பரப்பு பயன் பெற்றுள்ளது.

நடப்பு நிதியாண்டில் 85 பணிகளுக்கு
22 கோடியே 11 லட்சம் ரூபாய் நிதி

ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள்
நடைபெற்று வருகிறது.

விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும்
திட்டத்தின் கீழ் 164 கோடியே 10
லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாணாக்கர்களுக்கு
1 லட்சத்து 93 ஆயிரத்து 99 விலையில்லா
மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லா மிதிவண்டிகள்
வழங்கும் திட்டத்தின் கீழ் 39 கோடியே
2 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்,
விருதுநகர் கிராமம் நிறைந்த மாவட்டம். கிராமத்திலே இருக்கின்ற மாணவ, மாணவியர்கள் உரிய நேரத்திலே பள்ளிக்குச் செல்வதற்கும், பள்ளியிருந்து வீட்டிற்குச் திரும்புவதற்கும் புரட்சித்தலைவி அம்மாவினுடைய சிந்தனையிலே உதித்த சிறப்பான இந்த மிதிவண்டி வழங்குகின்ற திட்டம். அந்தத் திட்டத்தின் வாயிலாக, நம்முடைய மாணவச் செல்வங்கள் சிறந்த கல்வியை பயிலக்கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்த தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள். இந்த மாவட்டத்தில் மட்டும் 1 லட்சத்து 7 ஆயிரத்து 424 மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கியிருக்கிறோம். இதெல்லாம் சாதனையல்லவா ?

படித்த பெண்கள் திருமண உதவி
திட்டத்தின் கீழ் 22,611 பெண்களுக்கு
78 கோடியே 54 லட்சம் ரூபாய் நிதியுதவி மற்றும்
90.44 கிலோ தங்கம் வழங்கப்பட்டுள்ளது.

தங்கம் விலை என்னவென்று உங்களுக்குத் தெரியும். ஆகவே, ஒரு குண்டுமணி தங்கம் கூட இல்லாத ஏழை பெண்கள் கூட இன்றைக்கு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே தாலிக்குத் தங்கம் அரை பவுன் என்பதை ஒரு பவுன் கொடுத்த தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக்
காப்பீட்டுத் திட்டத்தின் கீழ்,
38 ஆயிரத்து 304 பயனாளிகளுக்கு 66 கோடியே
84 லட்சம் ரூபாய் செலவில்

மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 39 ஆயிரத்து 792 விவசாயிகளுக்கு
25 கோடியே 74 லட்சம் ரூபாய் நிதி உதவி
வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை வீடுகள்
கட்டும் திட்டத்தின் கீழ், 162 கோடியே 30
லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏழை எளிய
குடும்பங்களுக்கு சூரிய மின்சக்தியுடன் கூடிய
9 ஆயிரத்து 658 வீடுகள் கட்டி
வழங்கப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் 11 கோடியே 86 லட்சம்
ரூபாய் மதிப்பீட்டில் 659 பசுமை வீடுகள்
கட்டித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு
வருகின்றன.

தாய் திட்டத்தின் கீழ் 450 கிராம
ஊராட்சிகளைச் சார்ந்த 1745 குக்கிராமங்களில்
107 கோடியே 82 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
6041 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
நடப்பாண்டில் 19 கோடியே 53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 175 பணிகளுக்கு
நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு
பணிகள் நடைபெற நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ்,
8660 வீடுகள் 95 கோடியே 7 லட்சம்
ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்பட்டுள்ளன.
நடப்பாண்டில் 32 கோடியே 33 லட்சம் ரூபாய் செலவில்,
1902 வீடுகள் கட்டித்தர நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

22,423 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு
வங்கிகளின் மூலம்
529 கோடியே 78 லட்சம் ரூபாய்

நேரடிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.
சாத்தூர், அருப்புக்கோட்டை ஆகிய
இரண்டு இடங்களில் பல்கலைக் கழக
உறுப்புக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.
சிவகாசியில் அரசு கலை—அறிவியல்
கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.

அருப்புக்கோட்டை மற்றும் சாத்தூரில்
அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள்
தொடங்கப்பட்டுள்ளன.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு
நிதி உதவி திட்டத்தின் கீழ் 1 லட்சத்து
1 ஆயிரத்து 670 கர்ப்பிணி தாய்மார்களுக்கு
96 கோடியே 20 லட்சம் ரூபாய்
நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

பள்ளிகள் கட்டுமான பணிகளுக்கென்று
32 கோடியே 5 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு
செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்
பகிர்மான கழகத்தின் சார்பில்
129 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
15 புதிய மின் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
அருப்புக்கோட்டை வட்டத்தில்
47 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்
சிவகாசி வட்டத்தில் 15 கோடியே 75 லட்சம்
ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள
துணை மின் நிலையங்கள் பயன்பாட்டிற்கு
கொண்டு வரப்பட்டுள்ளன.
மேலும் 46 கோடியே 83 லட்சம் ரூபாய்
மதிப்பீட்டில் மாவட்டத்தின் பல்வேறு
இடங்களில் துணை மின் நிலையங்கள்
மற்றும் கூடுதல் திறன் கொண்ட புதிய
மின்மாற்றிகள் அமைக்கும் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

நெடுஞ்சாலைத்துறை – நபார்டு கிராம சாலைகள்

திட்டத்தின் கீழ், 96 கோடியே 71 லட்சம்
ரூபாய் மதிப்பீட்டில் 51 பாலங்கள் மற்றும்
81.49 கி.மீ சாலைப் பணிகள் மற்றும்
சிறுபாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும்
பராமரிப்பு பிரிவின் கீழ் 598 கோடியே
7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1364.71
கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.
6 கோடியே 15 லட்சம்
ரூபாய் மதிப்பீட்டில் 6 பாலங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாண்புமிகு அம்மா அவர்களின்
சட்டப்பேரவை அறிவிப்பிற்கிணங்க,
பட்டாசு தொழிற்சாலைக்களுக்கான
34.44 கி.மீ. சாலைகள், 13 கோடியே
53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
மேம்படுத்தப்பட்டுள்ளன.

தேசிய நெடுஞ்சாலைத்துறையின் கீழ்
73 கோடியே 20 லட்சம் ரூபாய்
செலவில், 127.63 கி.மீ சாலைகள்
மேம்படுத்தப்பட்டுள்ளன.

தியாகி சங்கரலிங்கனார் மணிமண்டபம்
77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக
கட்டப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டத்திலுள்ள சிவகாசி,
வெம்பக்கோட்டை, சாத்தூர், விருதுநகர்
ஒன்றியங்களைச் சார்ந்த 755 ஊரகக்
குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த்
திட்டப்பணிகள் 234 கோடி ரூபாய் மதிப்பீட்டில்
நடைபெற்று வருகின்றன.

விருதுநகர் மாவட்டத்திலுள்ள ராஜபாளையம்
நகராட்சி, சிவகாசி நகராட்சி
திருத்தங்கல் நகராட்சி மற்றும்

திருநெல்வேலி மாவட்டத்தை உள்ளடக்கிய நகராட்சிகளுக்கு தாமிரபரணி ஆற்றினை ஆதாரமாகக் கொண்டு
543 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்த
உத்தேசிக்கப்பட்டுள்ள
கூட்டுக் குடிநீர் திட்டத்திற்காக
நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறை சார்பில்
35 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் உள்பட,
48 கோடியே 79 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
முடிவடைந்த 146 பணிகளை நான் இன்று
துவக்கி வைத்துள்ளேன்.

பொதுப்பணித்துறை சார்பில்
6 கோடியே 38 லட்சங்கள்
மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள
கட்டடங்கள் உட்பட 13 கோடியே
38 லட்சம் ரூபாய் மதிப்பிலான 6 பணிகளுக்கு
நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

பல்வேறு துறைகளின் சார்பில்
54 கோடியே 87 லட்சம் ரூபாய் மதிப்பிலான
நலத்திட்ட உதவிகளை 21 ஆயிரத்து
733 பயனாளிகளுக்கு வழங்க உள்ளேன்.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இன்று வரை மாநிலம் முழுவதும் 10 ஆயிரத்து 448 கோடியே
53 லட்சம் ரூபாய் மதிப்பிலான
34,780 திட்டப் பணிகளை துவக்கி வைத்தும்,
3 ஆயிரத்து 516 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பிலான 6 ஆயிரத்து 760 பணிகளுக்கு
அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.

ஆக மொத்தம் 13 ஆயிரத்து 964 கோடியே
66 லட்சம் ரூபாய் மதிப்பிலான 41 ஆயிரத்து
540 பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த திட்டங்கள் அனைத்தும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியால் மக்களுக்காக வழங்கப்படும் திட்டங்கள்.

மக்களுக்காக வாழ்பவர்களைப் பார்த்து –
உழைக்காமல்,    வீண்பொழுது கழிப்பவர்கள்
வாய்க்கு வந்தபடி பேசுவார்கள்.
அவர்களுக்கு காலம்தான் பதில் சொல்லும்.
இதைச் சொல்கிறபோது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு நாள் ஆற்றில் நண்பர்கள் பலர்
குளித்து கொண்டிருந்தனர்.
திடீரென்று ஆற்றில் வெள்ளம்
பெருக்கெடுத்து ஓடியது.
ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தவர்களில்
பலர் அடித்துச் செல்லப்பட்டனர்.
கரையோரம் இருந்த பலரது பொருட்களும்
அடித்து செல்லப்பட்டன.

இதை கண்ட,  ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த
நண்பர்கள் தங்களால் இயன்ற அளவு
ஆற்றில் தத்தளித்துக் கொண்டிருந்தவர்களையும்,
அவர்களது உடமைகளையும் காப்பாற்றினர்.

அந்நண்பர்கள் குழுவைச் சேர்ந்த,
பேராசை கொண்ட ஒருவன் மட்டும்
தத்தளித்தவர்களை காப்பாற்றாமல்,
கேட்பாரற்று மிதந்து வந்த
பொருட்களையே குறிவைத்து,
கொக்கி போட்டு கரைக்கு இழுத்து வந்து
தனதாக்கிக் கொண்டிருந்தான்.

இதை பார்த்த மற்ற நண்பர்கள்,
இது தவறு, மற்றவர் பொருளுக்கு ஆசைபடாதே,
பேராசை பெரு நஷ்டம் என்றும் அறிவுரை செய்தனர்.
ஆனால் பேராசை கொண்ட நண்பன் மட்டும்
தனது பணியிலேயே குறிக்கோளாக
கொண்டிருந்தான்.

அச்சமயத்தில், ஆற்றில்  கம்பளி மூட்டை போன்ற
ஒரு பொருள் மிதந்து வந்ததை அவன் கண்டான்.
கொக்கியினை கொண்டு இழுத்து பார்த்த பொழுது,
அப்பொருளை அவனால் இழுக்க முடியவில்லை.
எனவே, அக்கம்பளி மூட்டையை இழுத்து
கரைசேர்க்க  தானே ஆற்றில் குதித்தான்.

இதை கண்ட அவனது நண்பர்கள்
வேண்டாம் என்று கூறினர்.
ஆனால் அக்கம்பளி மூட்டையை கரைக்கு
கொண்டுவந்து, அம்மூட்டையிலுள்ள பொருட்களை
கொண்டு தான் பெரிய செல்வந்தன் ஆவேன்
என்று கூறியவாறே அவன் ஆற்றில் குதித்தான்.

அவ்வாறு குதித்து கம்பளி மூட்டையையும்
கட்டிபிடித்து கரைக்கு கொண்டுவர
முழு முயற்சி செய்தான்.  ஆனால்  நீண்ட நேரம்
ஆகியும் அவன் கரை திரும்பவில்லை.
நடு ஆற்றிலேயே போராடிக் கொண்டிருந்தான்.

இதை கண்ட கரையில் நின்று  கொண்டிருந்த
அவனது நண்பர்கள் கத்துகிறார்கள் –
“நண்பா, கம்பளி மூட்டையை
கொண்டு வரமுடியாவிட்டாலும் பரவாயில்லை –
அதை விட்டு விட்டு கரைக்கு வந்து விடு” என்றார்கள்.

அதற்கு அவன்
“நான் எப்பவோ கம்பளி மூட்டையை விட்டுவிட்டேன்.
இப்ப இதுதான் என்னை விடமாட்டேங்குது –
ஏனென்றால் இது கம்பளி மூட்டை இல்லை.
இது கரடிக் குட்டி” என்றான்.

இப்படிதான் பலர் ஆசைப்பட்டு,
தவறான இடத்திற்கு சென்றுவிட்டு,
இப்போது அதை விட்டுவிட்டு
வர முயன்றாலும் அவர்களால் முடியவில்லை.
தவறானவர்கள் அவர்களை பிடித்துக்கொண்டு

விட மறுக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் புதிது புதிதாக கண்டு பிடித்திருக்கின்றா. அரசியல் ரீதியாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க தில் இல்லாத அவர், டெங்கு காய்ச்சலை பிடித்துக் கொண்டார். எப்படி, கரடியை பிடித்தார்களோ அதைப்போல இவர் டெங்கு காய்ச்சலை பிடித்துக் கொண்டு, அதை வைத்து அரசியலாக்க பார்க்கின்றார். அது ஒருக்காலும் முடியாது. டெங்கு காய்ச்சாலை சீதோஷணநிலை மாறுபடுகின்றபொழுது வருகின்ற ஒரு காய்ச்சல். இது எல்லா சமயத்திலும், மழைக்காலத்தில் இப்படிப்பட்ட காய்ச்சல் எல்லாம் வருகின்றது. அது அரசால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு முற்றிலும் ஒழிக்கப்படுகின்றது. ஆனால் அவர் இந்த ஆட்சிக்கு டெங்கு ஆட்சி என்று ஒரு பெயரும் சூட்டிவிட்டார். அதற்கு மாண்புமிகு கைத்தறி துறை அமைச்சர் அண்ணன் ஓ.எஸ். மணியன் அவர்கள் அழகாக அவருடைய ஆட்சி பற்றி குறிப்பிட்டார். என்ன ஆட்சி என்று அப்பொழுதே குறிப்பிட்டார். ஆகவே, அப்படிப்பட்ட ஆட்சி திமுக ஆட்சி. ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி மக்கள் ஆட்சி. மக்களுக்கு சேவை செய்கின்ற இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். நீங்கள் எந்தப் பெயரை வேண்டுமானாலும் வைக்கலாம். அதனை மக்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. ஆகவே, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் கண்ட கனவை, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விட்டுச் சென்ற பணியை தொடர்ந்து செயலாற்றக் கூடிய ஆட்சி அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே நினைவுகூர கடமைப்பட்டிருக்கின்றேன.

ஆகவே, நீங்கள் எந்த சூழ்ச்சி செய்தாலும், எத்தகைய தில்லுமுல்லு செய்தாலும் இந்த ஆட்சியை கலைத்து விடுவோம் என்று மட்டும் நீங்கள் நினைத்து விடாதீர்கள். ஏனென்று சொன்னால் பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய கூட்டம் பெரிய கூட்டம். ஆகவே, 20 இடத்தில் நாங்கள் பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை நாங்கள் கண்டிருக்கின்றோம். அத்தனை நூற்றாண்டு விழாவிலுமே இலட்சத்திற்கு மேற்பட்ட தொண்டர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு, இந்த இயக்கத்திற்கு நாங்கள் இருக்கின்றோம், துணை இருக்கின்றோம் என்று எங்களுக்குத் துணையாக நிற்கின்றார்கள். ஆகவே, இந்த பொது மக்கள் தான் எஜமானர்கள். இந்த பொதுமக்கள் தான் நீதிபதிகள். இவர்கள் தான் ஆட்சிக்கும், கட்சிக்கும் துணை நிற்கின்றார்கள் என்பதை அவர்களுக்கு இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

அதேபோல, எவ்வளவோ பொய்யான குற்றச்சாட்டு, மூட்டை, மூட்டையாக பொய்யை அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எவ்வளவு பொய் மூட்டைகளை அவிழ்த்து விட்டாலும் இந்த ஆட்சியை தொட்டுக்கூட உங்களால் பார்க்க முடியாது. ஏனென்றால் நான் சொன்ன திட்டங்கள், இந்த விருதுநகர் மாவட்டத்திற்கு மட்டும் அம்மாவினுடைய ஆட்சி இவ்வளவு கொடுத்திருக்கின்றது. அம்மாவினுடைய அரசு கொடுத்திருக்கின்றது. இந்த மாவட்டத்தினுடைய மக்கள் இவ்வளவு நன்மைகளை பெற்றிருக்கின்றார்கள். ஆகவே, அம்மாவினுடைய அரசு இவ்வளவு நன்மையை இந்த மாவட்ட மக்களுக்கு செய்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

கடுமையான வறட்சி, 140 ஆண்டு காலம் இல்லாத வறட்சியை நாம் சந்தித்தோம். இப்படிப்பட்ட வறட்சியான காலத்திலும்கூட விலைவாசி உயராமல் நாங்கள் பார்த்துக் கொண்டோம். அதுமட்டுமல்ல, இந்த கடுமையான வறட்சியில் குடி தண்ணீர் பிரச்சினை ஏற்பட்டது. அந்த குடி தண்ணீர் பிரச்சினையைகூட நாங்கள் முழுமையாக சமாளித்து மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு. இன்றைக்கு இயற்கை பார்த்து, நல்ல மழை பொழிகின்றது. நாங்கள் வருகின்றபொழுது பார்க்கின்றோம், எங்கு பார்த்தாலும் பசுமையாகக் காணப்படுகின்றது. எங்கு பார்த்தாலும் குளங்கள் நிரம்பி வழிகின்றன. ஆகவே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு மக்களுடைய அரசு, மக்களுக்குத் தேவையான நன்மைகளைச் செய்யும், மக்களுக்குத் துணை நிற்கும் அரசு அம்மாவினுடைய அரசு என்பதை மீண்டும், மீண்டும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, கடுமையான வறட்சியின் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள். அப்படி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 2247 கோடி வறட்சி நிவாரணத் தொகையாக வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு. இது விவசாயிகளுடைய அரசு என்பதையும் இந்த நேரத்திலே நினைவுகூர கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல, இன்றைக்கு கல்வியிலே ஒரு புரட்சி, மறுமலர்ச்சியையே உருவாக்கித் தந்திருக்கின்றோம். இன்றைக்கு பள்ளிக்கல்வித்துறைக்கு மட்டும், கல்விக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்த அரசு அம்மாவினுடைய அரசு. 2017–18ஆம் ஆண்டு மட்டும் 26,932 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நம்முடைய மாணவர்களுக்கு சிறந்த கல்வி வழங்க வேண்டும் என்பதற்காக இவ்வளவு தொகை கல்வித் துறைக்கு வழங்கப்பட்டிருக்கிறது. வேறு எந்தத் துறைக்கும் இவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது கிடையாது, கல்வித் துறைக்குத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு பல்வேறு கிராமங்களில் இருக்கின்ற மாணவச் செல்வங்களுக்கு கல்வி கிடைக்க வேண்டும்

என்பதற்காக அந்தந்த பகுதியிலே 227 தொடக்கப்பள்ளிகளை நாங்கள் துவக்கியிருக்கின்றோம். 116 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாக உயர்த்தியிருக்கின்றோம். 829 நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியிருக்கின்றோம். 401 உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டன.

ஆகவே, இன்றைக்கு மாணவர்களுடைய சேர்க்கை, பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை இன்றைக்கு உயர்ந்திருக்கின்றது. ஆகவே, ஆங்காங்கே இருக்கின்ற ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட ஏழை குடும்பத்திலே வாழ்கின்ற மாணவர்கள் அந்தப் பகுதியிலேயே கல்வி கற்க வேண்டும் என்பதற்காக இந்த கல்விக்கூடங்களையெல்லாம் நம்முடைய அரசு திறந்திருக்கிறது என்பதைத் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல, இன்றைக்கு இப்படிப்பட்ட பள்ளிகள் துவங்கப்பட்டதன் விளைவு, தொடக்கக் கல்வியிலே படிக்கின்ற மாணவர்களுடைய சேர்க்கை 99.85 விழுக்காடு உயர்ந்திருக்கிறது, நடுநிலைப் பள்ளி மாணவர்கள் சேர்க்கை 99.20 விழுக்காடாக உயர்ந்திருக்கின்றது. கிராமத்திலிருந்து நகரம் வரை எங்கெல்லாம் பள்ளிகள் தேவையோ, அங்கெல்லாம் புதிய பள்ளிகள் தொடங்கப்பட்டு மாணவர்களுடைய சேர்க்கை உயர்ந்திருக்கின்ற காட்சியை அம்மாவினுடைய அரசில் தான் பார்க்க முடிகிறது. அதேபோல, இன்றைக்கு அதிக அளவிலே உயர்கல்வியில் படிக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. அதற்கு புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது. புரட்சித்தலைவி அம்மா இருக்கின்ற காலத்திலே, ஐந்தாண்டுகளிலே 65 கலை மற்றும் அறிவியில் கல்லூரிகளை கொடுத்திருக்கின்றோம்.

இதன் மூலமாக இன்றைக்கு ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்கல்வி குறைந்த கட்டணத்திலே கற்கக்கூடிய சூழலை அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, அம்மா வழியிலே வந்த அம்மாவினுடைய அரசும் இந்த ஆண்டு 8 கலை மற்றும் அறிவியில் கல்லூரிகள், பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் 3, என்று உருவாக்கிக் கொடுத்திருக்கின்றது. ஆகவே, இதன்மூலம், ஏழை, எளிய குடும்பத்திலே பிறந்த மாணவ, மாணவியர்கள் குறைந்த கட்டணத்திலே உயர்கல்வி கற்க முடியும் என்ற சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக, அம்மாவினுடைய ஆட்சி தான் கல்வியிலே சிறந்த ஆட்சி என்று மக்கள் போற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, மருத்துவக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி என்று பல்வேறு

கல்லூரிகளை அம்மாவினுடைய ஆட்சியில் தான்திறக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

இங்கே கூட 21 அரங்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லாம் இந்த அரசு என்ன சாதனை படைத்திருக்கிறது, என்ன திட்டங்களை கொண்டு வந்திருக்கிறது, என்ன மக்களுக்கு நன்மை செய்திருக்கிறது என்றெல்லாம் கேள்வி கேட்கின்றார்கள். அவர்களெல்லாம் கொஞ்சம் வந்து பார்த்துவிட்டு போங்கள். **(விருதுநகர் மாவட்டத்திற்கான புதிய அறிவிப்புகள்)**

விழா முடிந்து பொதுமக்களும், தொண்டர்களும், மகளிரும், இளைஞர்களும், பத்திரமாக
வீடுபோய்ச் சேரவேண்டும்.
குறிப்பாக வாகனத்தில் செல்பவர்கள்
கவனமாக செல்லவேண்டுமென்று
அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்த
நல்ல உள்ளங்களுக்கு எனது
மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொண்டு,

இந்த அரசு உங்களின் சேவகனாக
தொடர்ந்து பணியாற்றும் என்பதை
தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

நேற்றும் நமதே!
இன்றும் நமதே!
நாளையும் நமதே!
வாழ்க அண்ணா நாமம்!
வளர்க புரட்சித் தலைவர் புகழ்!
தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!
நன்றி!
வணக்கம்!

* * * * *

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**